**மேட்டூர் சார்பு நீதிமன்றம்**

| M.C.O.P. No. 29/2020 | Date : 30.08.2023 | PW1 |
|---|---|---|
| Name: அமுதா | W/o. **ராஜவேல்** | |
| Evidence Recorded Time: 12.36 P.M. to 12.45 P.M. | | |

**3–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

விபத்து சமயத்தில் நான் என்ன வாகனத்தை ஓட்டிச் சென்றேன் என்றால் ஸ்கூட்டி வாகனத்தை ஓட்டி சென்றேன். நான் ஓட்டி சென்ற வாகனத்திற்கு இன்சூரன்ஸ் உள்ளதா என்றால் உள்ளது. எனக்கு பின்னால் என் அம்மா அலமேலு அமர்ந்து வந்தார். இந்த மனுவை விபத்தில் என் அம்மாவின் இறப்பிற்காக இழப்பீடு கேட்டு தாக்கல் செய்துள்ளேன். நான் விபத்து சமயத்தில் என்ன தொழில் செய்த வந்தேன் என்றால் முறுக்கு சுடும் தொழில் செய்து வந்தேன். எனக்கு எங்கு அடிபட்டது என்றால் நெஞ்சு மற்றும் காலில் அடிபட்டது. எனது அம்மாவிற்கு அடிபட்டதும் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார்களா என்றால் இல்லை. அடிபட்டதும் எந்த மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார்கள் என்றால் நியூரோ பவுண்டேசன் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். எனது ஓட்டுநர் உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எந்த இன்சூரன்ஸ் நிறுவனத்தில் எனது வாகனம் இன்சூரன்ஸ் செய்யப்பட்டது என்றால் தெரியாது. எனது வாகனத்திற்கான ஆர்.சி புத்தகத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.4–ல் TN 57 J 1588 மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் பாரா பத்தில் இன்சூரன்ஸ் நிறுவனம் இல்லை என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் 3 வது எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். விபத்து எந்த தேதியில் நடைபெற்றது என்றால் 08.09.2019 ஆகும். ம.சா.ஆ.9 ஆவணத்தில் 3 ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் எந்த வாகனத்திற்கு என்று குறிப்பிடாமல் 10.09.2019–ல் கொடுக்கப்பட்ட கலெக்சென் ரசீது மட்டும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் என் அம்மா என்ன தொழில் செய்து வந்தார் என்றால் ஆயம்மாவாக வேலை செய்து வந்தார். எனது தாயாரின் வயது,

வருமானத்தை காட்டக்கூடிய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் திருமணம் ஆகி என் கணவருடன் தனியாக வசித்து வருகிறேன் என்றால் சரிதான். எனது வயதான தாயாரை நான்தான் கவனிந்தது வந்ததாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனது வாகனத்தின் இன்சூரன்ஸ் நிறுவனத்தையும் அதன் காப்பீட்டாளரையும் இந்த மனுவில் தரப்பினராக சேர்க்கபடாத காரணத்தினால் இந்த மனு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த ம.சா.ஆ.9–ன் படி 08.09.2019 விபத்திற்கு பின்னிட்டு 10.09.2019–ம் தேதியில் ஏதோ ஒரு வாகனத்திற்கு பாலிசி பிரீமியம் கட்டியுள்ளதாக காட்டப்பட்டுள்ளதால் மேற்படி விபத்தின் போது நாங்கள் கூறுவது போல 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் TN 57 J 1588 என்ற வாகனத்திற்கு முறையான காப்பீடு இல்லாததால் 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த மனு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.